மென்றும் எட்டு கோடி ரூபாய்த் திட்டமென்றும் பிரிக்கப்பட்டது. முதலில் மத்திய அரசே இதை மான்யமாகக் கொடுக்கும் திட்டம் என்று சொன்னார்கள். பின்னர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கடனாகக் கொடுங்கள் என்று கேட்டோம். கேட்டுக் கேட்டு இப்போது இரண்டு கோடி ரூபாய்தான் கிடைத்திருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, does it connect Muthukadu and Thiruvanmiyur in the East Coast Road which is going *via* Mahabalipuram to Kanyakumari.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Yes, Sir.

Multi-storeyed Building.

* 60. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to construct multi-storeyed building behind Anna Statue in Mount Road, Madras; and

(*b*) if so, the details thereof?

பல மாடிக் கட்டடம்.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, அண்ணா சாலையிலுள்ள அண்ணா சிலைக்குப் பின்புறமாக பல மாடிக் கட்டடம் கட்டும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இந்த செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

Pedestrian Subway Opposite to Moore-Market.

* 61. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to put up a pedestrian subway opposite to Moore-Market on the Poonamallee High Road, Madras; and

(*b*) if so, the details thereof ?

1972 ஆகஸ்ட் 18]

மூர் அங்காடிக்கு எதிரில் சுரங்கப்பாதை.

திரு எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில், மூர் அங்காடிக்கு எதிரில் நடந்து செல்வோருக்கெனச் சுரங்கப்பாதை ஒன்று அமைக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ)&(இ) பூந்தமல்லி தேசிய நெடுஞ்சாலையில் பூங்கா ரெயில் நிலையத்திற்கு அருகே ஒரு சுரங்கப்பாதை ரூ. 11.50 லட்சம் அளவில் அமைக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கி இருக்கிறது.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, இதே இடத்தில் ஒரு 'ஃப்ளை ஓவர்' கட்டுவதற்கான திட்டம்பற்றிய செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, முதலில் 'பெடஸ்ட்ரியன் ஃப்ளை ஓவர்' கட்ட வேண்டும் என்ற குறிப்பைத்தான் கொடுத்தார்கள். பின்னர் அது அதிக அளவிற்குப் பயன்படாது என்ற காரணத்தினால், அது தேவையில்லை என்று கருதி கைவிடப்பட்டுவிட்டது.

Nirar Tunnel.

* 62 *Q*.—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether heavy landslips have occurred in June, 1971 at the entry face of the Nirar Tunnel;

(*b*) if so, the expenditure incurred in this regard; and

(*c*) the details of delay caused to the completion of the work?